### சக்கரபாணி அமைச்சராக இருந்தபோது கிடங்குகளை அதிகமாகக் கட்டினார்!

# இன்றைக்கு ரேசன் அரிசியை அனைத்து மக்களும் சாப்பிடுகிறார்கள்!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பதில்!



சென்னை, ஆக.22-

சட்டப்பேரவையில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பேசுகையில் சக்கரபாணி அமைச்சராக இருந்த போது நிறைய குடோன்கள் கட்டினார் என்றும், இன்றைக்கு ரேஷன் அரிசியை அனைத்து மக்களும் சாப்பிடுகிறார்கள் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் உணவு கூட்டுறவுத் துறை மானியக்கோரிக்கையில் கழகம் சார்பில் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பேசும்போது குறுக்கிட்டு அவை முன்னவர் எழுந்து ரேஷன் அரிசியை கடந்த காலத்தில் ஆட்டுக்கு, கோழிக்கும்தான் அதனை தீவனமாகப் பயன்படுத்தினார்கள் என்று பேசினார்.

அப்போது குறுக்கிட்டு எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு எழுந்து, என்ன அர்த்தத்தில் அப்படி சொல்கிறீர்கள், ஆட்டுக்கும், மாட்டுக்கும் என்பதெல்லாம் இல்லை. குறிப்பாக உங்களுக்கு அரிசி எப்படி கொடுப்போம் என்று சொன்னால், இந்த உணவு துறையை முப்பது வருடத்திற்கு முன்பு நானும் பார்த்தேன்.

கருப்பாக இருக்கிற அரிசி கடைசி நேரம் வேறு வழி.. அப்போதெல்லாம் அரிசி கிடைப்பது கஷ்டம், சென்ட்ரல் போர்டில் இருந்து கிடைக்கிறது கஷ்டம். அப்போது ஒரு மாசத்துக்கு அரை மாதத்துக்கு கொடுப்பாங்களேத் தவிர, உணவுத் துறை அமைச்சராக சக்கரபாணி வந்தபிறகு பாதுகாப்பான குடோன், எந்த காலத்திலும் எந்த உணவு அமைச்சரும், வேலுவும் உணவு அமைச்சராக இருந்தார், நானும் உணவு அமைச்சராக இருந்தேன். ஆனால் அவர் தான் நிறைய கட்டினார். அவருடைய காலத்தில் தளபதி அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கி நெல்லை நனையாமல் கொண்டு சேர்த்தது சக்கரபாணி.

**சர்க்கரை அளவு குறைகிறது!**

அவை முன்னவர் சொல்கிறார், ஆட்டுக்கும் மாட்டுக்கும் என்று. ஆட்டுக்கும் மாட்டுக்கும் அல்ல, இன்றைக்கு ரேஷன் அரிசி எல்லா மக்களும் சாப்பிடுகிறார்கள். காரணம். ரேஷன் அரிசி சாப்பிடுகிற போது அந்த சர்க்கரை அளவு குறைகிற காரணத்தினால் எல்லா மக்களும் அதனை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் எப்படி காலையில் எழுந்தவுடன் நெல்லிக்காய் ஜூஸ் குடிப்பேன் என்று பேட்டி கொடுக்குறீர்களோ, அது மாதிரி இன்றைக்கு ரேஷன் அரிசியை எல்லா மக்களும் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பது உண்மை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு குறுக்கிட்டு பேசினார்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் – நெல்லை – தூத்துக்குடி மாவட்ட

# முன்னாள் ‘முரசொலி’ நிருபர் க.மணிகண்டன் இல்லத் திருமண விழா!

## மாவட்டச் செயலாளர்கள் - பொறுப்பாளர்கள் - கழக நிர்வாகிகள் - முன்னோடிகள் பங்கேற்பு!



நெல்லை, ஆக. 22-

கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெறும் நெல்லை தூத்துக்குடி மாவட்ட முன்னாள் ‘முரசொலி’ நிருபர் க.மணிகண்டன் இல்லத் திருமண விழாவில் மாவட்ட கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கழக உடன்பிறப்புக்கள் பெருந்திரளாக பங்கேற்று விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

தமிழினத்தலைவர், செம்மொழி காவலர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், கழக தலைவர், அன்புத் தளபதி, எங்கள் குடும்பத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் அன்பு சகோதரர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நெல்லை தூத்துக்குடி மாவட்ட முன்னாள் ‘முரசொலி’ நிருபர் க.மணிகண்டன் (லேட்) ம.வேலம்மாள் (ரீ சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் முன்னாள் அறங்காவலர் குழு உறுப்பினர்) ஆகியோரது மகள், திருப்பூர், கோவை மாவட்ட முரசொலி நிருபர், திருப்பூர் வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் க.பழனியப்பன் ப.கமலக்கண்ணா என்னுடைய அண்ணன் மகள், தூத்துக்குடி மாவட்ட முரசொலி நிருபர் ம. பாலாஜி BE., பா.லெட்சுமி பாரதி M.A, B.Ed., அன்புத் தங்கை, திருவளர் நங்கை ம.சிவசங்கரி (எ) முத்து லெட்சுமி M.B.B.S., சென்னை. செ.முருகேசன் ரா.எம்மியம்மாள் ஆகியோரின் திருமகன் திருவளர் நம்பி செ.மு.முபேஷ் M.B.B.S., ஆகியோரது திருமண விழா, திருவள்ளுவ ராண்டு 2057, ஆவணி மாதம் 6ம் நாள் 23.08.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.45 மணிக்குமேல் 11.45 மணிக்குள் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் மாவட்டக் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் இந்நாள், முன்னாள் பிரதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உள்பட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கழக உடன்பிறப்புக்கள் பெருந்திரளாக பங்கேற்று விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் வத்திராயிருப்பு க.மீனாட்சிசுந்தரம் (லேட்) மீ.மீனாட்சி சுந்தரி, நெல்லை தென்காசி மாவட்ட முரசொலி நிருபர் சு.கோமதிநாயகம் நெ.நாகவல்லி, திருப்பரங்குன்றம், கா.காளீஸ்வரமூர்த்தி BE, (லேட்) கா.வேலா, சங்கரன்கோவில் சு.சீத்தாராமன் சங்கரி, சங்கரன்கோவில் லேட் சு.சபரிகிரிநாதன் சுந்தரி, கோவை முரசொலி ப.விஷால் B.sc., (Viscom)., நாகர்கோவில் மு.ரோகித் மிற்று M.B.B.S., ஆகியோர் வரவேற்று மகிழ்கின்றனர்.




கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் திருமூர்த்தி ஏற்பாட்டில் கவுண்டம்பாளையம் நகராட்சி கவுன்சிலராக 10 ஆண்டுகள் பொறுப்பு வகித்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எஸ்.கண்ணன், மலுமிச்சம்பட்டி ஔவை நகர் அ.தி.மு.க. பிரதிநிதி டி.முருகானந்நம், பா.ஜ.க. உறுப்பினர் சி.தேவதாஸ், அ.தி.மு.க. சிறுபான்மையினர் தலைவர் ஜி.ஏ.கான் உள்ளிட்ட மாற்றுக் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். உடன் மதுக்கரை மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெ.நந்தகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி தலைவர் சீரபாளையம் செந்தில் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மே.சு. சண்முகசுந்தரம்

**ஆகஸ்ட் 22 (2021)**



இளமைப் பருவத்திலேய கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றி வந்தவர்.

1950ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மதுராந்தகம் வட்ட முதல் செயலாளராகவும், நகர நெசவாளர் அணியிலும், இலக்கிய அணியிலும் பொறுப்பு வகித்தவர்.

அய்யன் திருவள்ளுவர் அறக்கட்டளையை உருவாக்கி, அதன்மூலம் மாணவர்களுக்கு பரிசு வழங்குதல், மக்களுக்கான மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### த.வெ.க அரசின் ‘நூறாவது நாள்’ படம்:

# கம்யூனிஸ்டுகள் மற்றும் கரப்பான் பூச்சிகளுக்குத் தடை!

இரண்டு நாட்களுக்கு முன்பு த.வெ.க அரசு தனது இரண்டு சுற்றறிக்கைகளைத் திரும்பப் பெற்றது. அவை தவறுதலாகவோ, தற்செயலாகவோ வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் அல்ல. த.வெ.க அரசு பொறுப்பேற்ற இந்த நூறு நாட்களில் நடத்திவரும் ஜனநாயகப் படுகொலைகளின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான முன்னோட்டம்தான் இது.

முதலாவதாக, கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகம் சார்பில் கடந்த 17ஆம் தேதி அனைத்துக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தில், கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள், இடதுசாரி கட்சிகள் மற்றும் தமிழ்நாடு காக்ரோச் ஜனதா கட்சி நடத்தும் போராட்டங்களில் பங்கேற்பதைத் தடுக்கும் வகையில் பள்ளிக் கல்வி, உயர்கல்வி, காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டிருந்தது.

அடுத்ததாக திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை வட்டாட்சியர் (தாசில்தார்) அய்யாச்சாமி, கடந்த 18ஆம் தேதி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில், குஜிலியம்பாறை வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து வருவாய் கிராமங்களிலும் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளில் உள்ள நபர்களின் பெயர், முகவரி ஆகியவற்றைச் சேகரித்து வருவாய் ஆய்வாளர்கள், வட்டாட்சியரிடம் அன்று மாலைக்குள் நேரடியாகச் சமர்ப்பிக்க வேண்டும்; அனைத்துக் கிராம உதவியாளர்களும் வருவாய் ஆய்வாளர்களுக்கு உதவிட இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது; அறிக்கை அளிக்கத் தவறா கிராம உதவியாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த இரண்டு உத்தரவுகளும் கடும் எதிர்ப்பு காரணமாகத் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. ஆனால் இவை ஒரு முடிவல்ல, தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் ஜனநாயகப் படுகொலையின் தொடக்கம்.



**மனுஷ்ய புத்திரன்**
மாநில ஆலோசகர்,
தி.மு.க. தகவல்தொழில் நுட்ப அணி

இதுவெல்லாம் உங்களுக்கு எதை நினைவூட்டுகிறது? பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் ஜனநாயக உரிமைகள் ஒடுக்கப்படும் சம்பவங்களை நினைவூட்டினால் அதில் மிகை ஒன்றுமில்லை. யோகி ஆதித்யநாத் உத்தரப் பிரதேசத்தில் நடத்திக்கொண்டிருக்கும் காட்டாட்சியையும் மிஞ்சிவிட்டது விஜய்யின் ஆட்சி. டெல்லியில் நீட் முறைகேடுகளுக்கு எதிராகப் போராடிய மாணவர்களை பா.ஜ.க அரசு எவ்வாறு ஒடுக்கியதோ, அதேபோல தமிழ்நாட்டில் நீட்டிற்கு எதிராகப் போராடிய மாணவர்களை விஜய் அரசு ஒடுக்கியது. திராவிடர் கழகம் நடத்த முயன்ற வாகனப் பேரணிக்குத் தடைவிதித்தது. சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உட்பட அரசை விமர்சிக்கும் தி.மு.கவினர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் இந்த அரசு குட்டு வாங்கி அவர்களை விடுதலை செய்தது. ஊடகவியலாளர் விஜயன், விசாரணை என்ற பெயரில் ஒரு பொய் வழக்கில் மிரட்டப்பட்டார். த.வெ.க அரசையோ விஜய்யையோ விமர்சிக்கும் சமூக ஊடகப் பக்கங்கள் முடக்கப்படுகின்றன.

ஆங்கிலத்தில் kneejerk reaction என்றொரு பதம் உண்டு. தன்னியல்பான அச்சத்தைச் சமூகத்தில் விதைத்தல்; அதன் மூலமாகத் தன்னை எதிர்ப்பவர்களின் மனங்களையும் செயல்களையும் ஒடுக்குதல். இதை உலகின் எல்லா பாசிச அரசுகளும் செய்திருக்கின்றன. "பாசிசமா பாயாசமா" என்று நக்கலடித்தவர், முழு பாசிசப் பாயாசமாக மாறி நிற்கிறார். பா.ஜ.கவைக் கொள்கை எதிரி என்று ஒப்புக்கு கூறிவிட்டு, பா.ஜ.க அரசுகளே செய்யத் தயங்கும் காரியங்களைச் செய்யத் தயாராகிவிட்டார். இது பா.ஜ.கவின் நிழல் அரசு என நான் திரும்பத் திரும்பக் குறிப்பிடுவதன் காரணம் இதுதான்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுக்க, ஏன் உலகம் முழுக்க மாணவர்களின் ஜனநாயகப் போராட்டங்களின் வழியாகத்தான் மாபெரும் மாற்றங்கள் நடந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஜல்லிக்கட்டுப் போராட்டம், சமீபத்தில் கரப்பான் பூச்சிக் கட்சியினர் போராட்டம் எனப் பல உதாரணங்களைக் கூறலாம். ஆசியாவில் 'அரேபிய வசந்தம்' உள்ளிட்ட மாணவர் இயக்கங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் மிகப்பெரியவை. ஆனால், இளைஞர்களின் ஆட்சி என்றும் இளைஞர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி என்றும் தம்பட்டமடித்துக்கொள்ளும் த.வெ.க அரசு, மாணவர்களின் அரசியல் உரிமைகளை நேரடியாக ஒடுக்கும் சுற்றறிக்கையை அனுப்புகிறது.

ஏற்கெனவே தனியார் கல்லூரிகளில் மாணவர் அரசியல் போராட்டங்கள் பல்வேறு வழிகளில் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அரசுக்கல்லூரி மாணவர்கள் மட்டுமே இப்போதைக்கு ஓரளவு சமூகப் பிரச்சினைகளுக்காகவும் கல்விப் பிரச்சினைகளுக்காகவும் போராட்டக் களங்களுக்கு வருகிறார்கள். அதையும் ஒடுக்க இந்த அரசு முயல்கிறதா? தொடர்ந்து மாணவர்களை அரசியலற்றவர்களாக மாற்றுவதுதான் தனது தனிநபர் வழிபாட்டு அரசியலுக்கு நல்லது என விஜய் நினைக்கிறாரா?

கரப்பான் பூச்சிக் கட்சி பா.ஜ.கவுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட கட்சி. அந்தக் கட்சியின் போராட்டங்களை அனுமதிக்க வேண்டாம் எனக் குறிப்பாகத் தெரிவித்துச் சுற்றறிக்கை அனுப்புகிறார்கள். டெல்லியில் நீட் எதிர்ப்புப் போராட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராகக் கரப்பான் பூச்சிக் கட்சி மாணவர்களுடன் இணைந்து நின்று போராடியவர்கள் இடதுசாரி மாணவர் அமைப்புகள். அந்த அமைப்புகளின் போராட்டங்களையும் அனுமதிக்க வேண்டாம் என்று அந்தச் சுற்றறிக்கை கூறுகிறது. அதாவது யாரெல்லாம் பா.ஜ.கவுக்கு எதிரிகளோ, அவர்கள் எல்லாம் த.வெ.க அரசின் எதிரிகள். இது யாருடைய அரசு? யாருக்காக வேலை செய்யும் அரசு? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உயர்கல்வித் துறை அமைச்சர் சட்டமன்றத்தில் இது தொடர்பான கேள்விக்கு, "அந்தக் கட்சியின் பெயர் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது" என்று கடந்து செல்கிறார்.

சொல்ல வேண்டிய ஒன்று விடப்பட்டால்தான் அது தவறு. மாறாக இரண்டு அமைப்புகளின் பெயர்கள் அழுத்திச் சொல்லப்பட்டால் அது தவறல்ல, நோக்கம். காங்கிரஸும் பா.ஜ.கவும் த.வெ.கவும் ஒரே நேர்கோட்டில் ஒரே நோக்கத்திற்காக வேலை செய்கின்றன.

அடுத்ததாக, குஜிலியம்பாறை வட்டாரத்தில் இடதுசாரிகள் கணக்கெடுப்பு விவகாரம். பொதுவாக ஒரு பகுதியில் சமூக விரோதிகளைத்தான் கணக்கெடுப்பார்கள். ஆனால் ஒரு அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை ஏன் கணக்கெடுக்க வேண்டும்? அவர்களைக் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டுவருவதுதான் ஒரே நோக்கமாக இருக்க முடியும். வருங்காலத்தில் அவர்கள் ஏதேனும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்களா எனக் கண்காணிக்க மட்டுமே அரசிற்கு இந்தத் தகவல் பயன்படும்.

திண்டுக்கல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், "கைரேகைச் சட்டம் அமலில் இருந்த காலத்திலும், அரசியல் இயக்கங்கள் தடை செய்யப்பட்ட காலத்திலும்கூட இது போன்ற சுற்றறிக்கையை வட்டாட்சியர்கள் பிறப்பித்ததில்லை" என்கிறார். இந்தச் சுற்றறிக்கைக்கும் எதிர்ப்புக் கிளம்பியதும், "சுற்றறிக்கை வெளியிட்ட குஜிலியம்பாறை வட்டாட்சியர் அய்யாச்சாமியை பணியிட மாற்றம் செய்துவிட்டோம்" என்பதோடு சட்டமன்றத்தில் அமைச்சர் இந்தப் பிரச்சினையை மூடி மறைக்கிறார். ஒரு வட்டாட்சியர் இப்படி ஒரு சுற்றறிக்கையைத் தன்னிச்சையாக அனுப்ப முடியுமா? அதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கிறதா? அதன் நோக்கம் என்ன? அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் கண்காணிக்கும் முயற்சியின் ஒரு பரிசோதனை முயற்சியாக இது செய்யப்பட்டதா?

அரசு இயந்திரத்தில் இருக்கும் பா.ஜ.க ஆர்.எஸ்.எஸ் ஆதரவாளர்கள் எடப்பாடி பழனிசாமி ஆட்சிக் காலத்தில் செயல்பட்டதுபோல இப்போது தன்னிச்சையாகச் செயல்பட ஆரம்பித்திருக்கிறார்களா, அல்லது த.வெ.க அரசின் கொள்கைகளே ஒன்றிய அரசின் கொள்கைகளா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

ஹிட்லரின் நாஜி ஜெர்மனியில்தான் இடதுசாரிகள் கணக்கெடுப்பு நடைபெற்றது. இப்போது அதன் ஒரு வடிவத்தைத் தமிழ்நாட்டில் காண்கிறோம். இந்த அரசைத் தாங்கிப் பிடிக்கும் இடதுசாரிகள் இதை எவ்வளவு மென்மையாகக் கடந்து செல்கிறார்கள் என்பதுதான் அவர்களது அரசியல் வீழ்ச்சியின் அவலம்.

விஜய்யின் நூறு நாள் ஆட்சியை 'நூறாவது நாள்' திரைப்படத்துடன்கூட ஒப்பிட இயலும். தோண்டத் தோண்ட ஜனநாயகத்தின் எலும்புக்கூடுகள்!